அனுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்
100 சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை 600 028.

பெறுநர்
சார்பதிவாளர்கள்
மாவட்டப்பதிவாளர்கள்
துணைபதிவுத்துறைத்தலைவர்கள்
அனைவருக்கும்

எண்.8317/சி1/14 நாள்:20.6.2014

ஐயா/ அம்மையீர்,

பொருள்: பட்டா மாற்றம் -- படிவம் 6 உடன் இணைத்து அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஒப்புகை பெறுதல் தொடர்பாக

பார்வை: இவ்வலுவலகக்கடித எண்.8317/சி1/14 நாள்: 3.3.14

** **

பார்வையில் கண்ட கடிதத்தின் மூலம் பட்டா மாற்றப் படிவத்துடன் பதிவு செய்யப்பட்ட ஆவண நகல், வில்லங்கச்சான்று, கணினி சிட்டா/ பட்டா நகல் மற்றும் முன் பதிவு ஆவண நகல்கள் ஆகியவற்றை இணைத்து அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கண்ட நகல்கள் இணைத்து சில சார்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படுவதில்லை என புகார் பெறப்பட்டுள்ளது.

இதனை செம்மையாக செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

சார்பதிவாளர்கள் பட்டா மாற்றத்திற்கு கீழ்க்கண்ட ஆவணங்களை தவறாது இணைத்து அனுப்ப வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1. படிவம் 6
2. தற்போது பதிவு செய்யப்பட்ட ஆவண நகல்
3. முன் பதிவு ஆவண நகல் (இறுதியாக பதிவு செய்யப்பட்ட ஆவணம்)
4. வில்லங்கச்சான்று நகல்
5. பட்டா / சிட்டா நகல்

பட்டா மாற்றம் குறித்த மனுவுடன் தேவைப்படும் ஆவணங்கள் குறித்த விளம்பர தகவல் சார்பதிவாளர் அலுவலகத்தில் தவறாது ஒட்டப்படல் வேண்டும்.

மேற்கண்ட ஆவணங்களை ஆவணப்பதிவின்போது பொது மக்களிடமிருந்து Xerox நகல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது. பின் ஒவ்வொரு வாரமும் இத்துடன் இணைக்கப்பட்ட உறை மேல் தாளில் இணைக்கப்பட்ட ஆவணங்களின் விவரத்தை பூர்த்தி செய்து இந்த உறை மேல் தாளை இரண்டு பிரதிகளுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரடியாகவோ / தபால் மூலமோ அனுப்ப வேண்டும். ஒரு பிரதியினை வட்டாட்சியரிடம் ஒப்படைத்து விட்டு இரண்டாவது பிரதியில் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த ஒப்புதல் பெற்ற பிரதியினை தனிக்கோப்பில் கோர்வை செய்து பராமரிக்க வேண்டும்.

மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் துணைபதிவுத்துறைத்தலைவர்கள் சார்பதிவாளர் அலுவலக ஆய்வின்போது இக்கோப்பினை சரிபார்க்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதிவுத்துறைத்தலைவருக்காக.